பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 20 | சனிக்கிழமை | 05.08.2023 | கதிர் 267

### 13ன் கீழ் வழங்கப்பட்டுள்ள

# 13 குறித்த முன்மொழிவுகளை ஓக. 15க்கு முன் தர அறிவிப்பு

### நாடாளுமன்றில் உள்ள கட்சிகளுக்கு ஜனாதிபதி எழுத்தில் விடுத்தார்

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் தமது முன்மொழிவுகளையும் யோசனைகளையும் ஓகஸ்ட் 15 அன்றைய தினத்திற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எழுத்து மூலம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஜூலை 26 அன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கூட்டப்பட்டிருந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு அமைவாக ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வு ஒன்றை அடைவதற்கு முன்பாக, அரசமைப்பில் ஏற்கனவே உள்ள 13ஆவது திருத்தத்தை ☞2

## இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத்தில் 'பெருச்சாளிகள்' சில அழகிய பெண்களுடன் செய்த சேட்டைகள் தொடர்பில் சில நாட்களுக்கு முன்னர் தகவல் பகிர்ந்துகொண்டிருந்தேன் அல்லவா வாசகர்களே! இப்போது அப்போது இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும், இதனை அவ்வளவு இலகுவான விடயமாக எடுத்துக்கொள்ள மாட்டோம் என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ருஷானி ரோஹணதீர உறுதியளித்திருந்தார் என்றும் தெரிவித்திருந்தேன் அல்லவா? அவர் சொன்னது போன்றே இப்போது 'பெருச்சாளிகளை' வேட்டையாடுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தின் பராமரிப்பு பிரிவில் பணியாற்றும் பெண்களை துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு நாடாளுமன்ற இயக்குநர் (நிர்வாகம்) ஜி. தச்சனா ராணி தலைமை தாங்குகிறார். இந்தக் குழுவில் ஹன்சார்ட் ஆசிரியர் சி.என்.எல்.டி.சில்வா மற்றும் உதவிப் பணிப்பாளர் ☞2

## ஹெரோயினுடன் பெண் கைது

(ந.லோகதயாளன்.)

யாழ். நகரில் பெண் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். நகரில் இயங்கும் நகைக் கடைகளுக்கு நகை வேலைசெய்பவரின் மனைவியே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து 80 மில்லிக் கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். போதைப் பொருள் ☞2

## பழைய அரசியலால் இனிமேல் நாடு முன்னேறவே முடியாதாம்

### ரணில் விக்கிரமசிங்க உரை

பழைய அரசியலால் நாட்டை முன்னேற்ற முடியாது எனவும் மீண்டும் அந்த அரசியலை நடமுறையில் முன்னெடுப்பதற்கு இடமளிக்க போவதில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இலங்கை தெங்கு பயிர் செய்கையாளர் சங்கத்தின் 29ஆவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றியபோது தெரிவித்ததாவது:

நாடு தற்போது வங்குரோத்து அடைந்துள்ளது. எப்படியோ இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்ல தற்போதைய ஆளும் தரப்புக்கு அதிஷ்டம் கிடைத்துள்ளது.

முதலில் கடன் மறுசீரமைப்பை செய்து முடிக்க வேண்டும். இது தொடர்பாக நாடாளுமன்ற அரசநிதிக்குழு பேச்சுவார்த்தை நடத்தியது. அனைவரும் கட்சி பேதமின்றி பணியாற்ற வேண்டும்.

அனைவரது ஒத்துழைப்புகளும் கிடைக்காமல் இருப்பது துரதிஷ்டவசமானது. சில கட்சிகளும், சிறிய குழுக்களும் இதனை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றன.

வீதியில் இறங்கி பெரிய அமைப்பை ஏற்படுத்தி போராடித் தடுப்பதற்கு முயற்சித்தனர். தற்போது ☞2

## இராமேஸ்வரம் – தலைமன்னார் இடையே கப்பல் சேவை குறித்து அமைச்சர் ஆய்வு



(ந.லோகதயாளன்.)

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை 3 மாதங்களிற்குள் ஆரம்பிப்பதறகு ஏதுவாகத் தலைமன்னார் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

தலைமன்னார் பியர் மற்றும் தலைமன்னார் பழைய பாலம் ஆகியவற்றிற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தானும் அவருடன் வந்திருந்தார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாள்ஸ் நிர்மலநாதன். செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட செயலாளர் ☞2

## நாமலின் திருமணத்திற்கான மின்கட்டணம் இன்னும் நிலுவை

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்திற்காக இலங்கை மின்சார சபை விநியோகித்த மின்சாரத்திற்கு செலுத்த வேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லையென மின்சார சபை தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விடுத்த கோரிக்கைக்கு அமைய இலங்கை மின்சார சபை இந்தத் தகவலை வழங்கியுள்ளது.

2019 வழங்கிய இந்த தற்காலிக மின் விநியோகித்திற்காக 26 இலட்சம் ரூபாவுக்கும் மேல் செலுத்தப்படவேண்டும் என இலங்கை மின்சார சபை, நளின் ☞2

## மருத்துவத் தம்பதி வீடு தாக்கப்பட்டதற்கு மத அமைப்பு ஒன்றின் மீது குற்றச்சாட்டு

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், மணல்தறை ஒழுங்கையில் உள்ள மருத்துவத் தம்பதியரின் வீடு மீது மீண்டும் மீண்டும் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முஸ்லிம் மத அமைப்பு ஒன்றே காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அந்த அமைப்பினரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைத் தொடர்ந்து அந்த வீட்டைவிட்டுத் தாம் வெளியேறுகின்றனர் என்று மருத்துவத் தம்பதியினர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவத் தம்பதியினர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்து வீட்டுத் திறப்பையும் ஒப்படைத்துள்ளனர்.

மணல்தறை வீதி, இலக்கம் 5 இல் உள்ள வீட்டில் நீண்ட காலமாக மருத்துவத் தம்பதியர் வாடகைக்கு இருந்துள்ளனர். வீட்டு உரிமையாளர் திடீரென உயிரிழந்துள்ளார். அதன் பின்னர் அந்த வீட்டை உரிமையாளர் தமது மத அமைப்புக்குத் தானமாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்று கூறி முஸ்லிம் மத அமைப்பு ஒன்று மருத்துவர்களை நாடி வீட்டை ஒப்படைக்கக் கோரியுள்ளது.

வீட்டு உரிமையாளருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி பராமரிப்புக்கெனத் தாங்கள் செலவிட்ட தொகையை மீளச் செலுத்துமாறும் வீட்டை ஒப்படைப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் அந்த வீட்டின் மீது இரண்டு தடவைகள் வாள்வெட்டுக் கும்பல் தாக்குதல் நடத்தியது. வீட்டில் இருந்த பொருட்கள் தீ வைத்துளிக்கப்பட்டும் ☞2

## கீரிமலையில் களவுபோன மே.சைக்கில் தீ வைத்து எரிப்பு



(ந.லோகதயாளன்.)

கீரிமலையில் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று அதிகாலை உரும்பிராய்ப் பகுதியில் தீ வைத்துக் கொழுத்தப்பட்டுள்ளது.

கீரிமலைப் பகுதியில் ஜூலை 28 உரிமையாளரிடம். நண்பர் ஒருவர் மோட்டார் சைக்கிளைப் பெற்று தெல்லிப்பளை நோக்கிப் பயணித்த சமயம் இனம் தெரியாத சிலர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞனைத் தாக்கி மோட்டார் சைக்கிளைப் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் உரிமையாளர் பொலிசாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். ☞2

## விளக்கம் கேட்கிறார் நாமல்

மின்கட்டணம் செலுத்தப்படவில்லையென தெரிவித்து வெளியிடப்பட்டுள்ள கடிதம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இலங்கை மின்சாரசபையிடம் விளக்கம் கோரியுள்ளார்.

மின்சாரக் கட்டணம் குறித்த துல்லியமான விவரங்களைத் தமக்கு வழங்குமாறும், அது உண்மையான ஆவணமாக இருந்தால் அதற்குத் தகுந்த பதிலை அளிக்குமாறும் இலங்கை மின்சார சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

2019 நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்திற்காக இலங்கை மின்சார சபை விநியோகித்த மின்சாரத்திற்கு செலுத்த வேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லையென மின்சார சபை தெரிவித்திருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை மின்சார சபை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது.

இது தொடர்பிலேயே நாமல் விளக்கம் கேட்டுள்ளார்.

## ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு ஆளும் தரப்பு அதற்கே உடன்படுகிறது

### அமைச்சர் பிரசன்ன முல்லைத்தீவில் தெரிவிப்பு

ஒற்றையாட்சியின் அதிகாரப்பகிர்வுக்கு தற்போதைய ஆளும் தரப்பு உடன்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று முல்லைத்தீவில் தெரிவித்தார்.

நிர்வாக அதிகாரம் பிரிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஆளும் தரப்பு இருப்பதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட குளம் முறிப்பு, கச்சிலைமடு, கதலியாறு மற்றும் ஒலுமடு ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட நானோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 'அனைவருக்கும் பாதுகாப்பான குடிதண்ணீர்' என்ற அரசின் கருத்தின் கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன, இதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செலவிடப்பட்ட தொகை 205 மில்லியன் ரூபாவாகும்.

அதன் முதற் ☞2

## கைவிடப்பட்ட 11,000 ஏக்கர் நிலத்தில் மீண்டும் விவசாயம்

எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளும் வகையில் கைவிடப்பட்டுள்ள 11,000 ஏக்கர் நெல்வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையைத் தொடங்க ஆளும் தரப்புத் திட்டமிட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் எமது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு துறையாக விவசாயம் காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர் படிப்படியாக இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. அதற்கு நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்

இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

எனவே, ஒரு நாடு என்ற வகையில், இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நாமும் தயாராக வேண்டும். நாட்டின் ☞2

## இனி இது .....

(நிர்வாகம்) இந்திரா திஸா நாயக்க ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இந்த விசாரணைக் குழு உறுப்பினர்களை நாடாளு மன்ற உறுப்பினர்கள் நேரில், மின்னஞ்சல் அல்லது தொலைபேசிமூலமோசந்திக்க முடியும் என நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழு உறுப்பினர்களைத் தவிர, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அல்லது உதவிச் செயலாளர் நாயகத்திடம் இது தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்க முடியுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தகவல்களை வழங்குபவர்களின் அடையாளங்கள் தொடர்பில் முழுமையான இரகசியம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடும் அழகிய பெண்களிடம் அதிகாரிகள் சிலர் விட்ட சில்லறைச் சேட்டைகள் நீண்ட காலமாக நடப்பதாகவும் அது குறித்து முறையிடப்பட்டால் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக இந்த விடயம் அமுங்கியே கிடந்ததாகவும் அதில் சிலர் துணிந்து முறையிட்டதுடன் தமக்கு நீதி வேண்டும் என்று கோரியதாலேயே இப்போது இந்த விவகாரம் ஒரு பிரச்சினையாக மாறியிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற என்பது நாட்டின் அதியுயர் உன்னத இடம். அங்கு அசிங்கங்கள் இருப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. அவை அகற்றப்பட்டேயாக வேண்டும். சட்டத்தரணியும் பெண்ணுமான நாடாளுமன்றச் செயலாளர் இதுவிடயத்தில் முழுமையான நீதியை வழங்குவார் என்று எதிர்பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 13 குறித்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன. ஜனாதி பதியாகப் பதிவியேற்றது முதல் தான் அதனைச் செய்வார் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வருகிறார். இதற்காக அவர் மூன்று தடவைகள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் கூட்டியிருந்தார்.

இருப்பினும் முழுமையான 13 என்பதற்குப் பதில், பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாத 13 மைனஸ் குறித்தே ஜனாதிபதி இப்போது பேசி வருகின்றார். இதற்குத் தமிழ்க்கட்சிகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. அதேநேரம் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு சிங்களக் கடும்போக்குவாதிகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றனர். எனினும் இந்தத் தரப்புக்களுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இல்லை.

இந்த நிலையிலேயே 13ஐ நடைமுறைப்படுத்துவது குறித்த கட்சிகளின் யோசனைகளை இரண்டு வாரங்களுக்குள் முன்வைக்குமாறு ஜனாதிபதியால் கோரப்பட்டுள்ளது. ஓக்ஸ்ட் 15 மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அதற்கு முன்னதாக கட்சிகள் தமது யோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## பழைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்திற்கு சென்று தடையுத்தரவை பெறமுயற்சித்து வருகின்றனர்.

தமது அரசியல் நோக்கத்திற்காக நீதிமன்றத்தை பயன்படுத்த பார்க்கின்றனர். தற்போது முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை நிறுத்தினால், ஒரு வாரத்திற்குள் வங்கி கட்டமைப்பு சீர்குலையும்

அத்துடன் வெளிநாடுகள் எம்முடன் கொடுக்கல், வாங்கலில் ஈடுபட மாட்டாது. பாராளுமன்றம் கூறினால் மாத்திரமே நிறுத்தப்படும். பாராளுமன்றத்திற்கே அதிகாரம் இருக்கின்றது. பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதால், வேறு தரப்பிடம் ஆலோசனைகளையோ, உத்தரவுகளையோ பெற முடியாது.

இதனால், தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம் என சிறிய கட்சிகளிடம் கோருகிறேன். அதேபோல் பழைய அரசியலால் நாடொன்றை முன்னேற்ற முடியாது. பழைய அரசியலால் நாம் இல்லாமல் போனோம். பழைய அரசியலை கொண்டு வர இடமளிக்க போவதில்லை - என்றார்.

## இராமேஸ்வரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் செயலாளர்கள் கடற்படை அதிகாரிகள் இந்திய நலன்புரியாளர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இவ்வருகையில் அமைச்சருடன் கலந்து கொண்டோரும் தலைமன்னார் பியர் மற்றும் தலைமன்னார் பழைய பாலம் ஆகியவற்றை நேரடியாகப் பார்வையிட்டனர். தலைமன்னார் பியர் கடற்படையின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் அதிகாரிகளுடன் ஒரு கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை ஆரம்பிப்பதில் உள்ள இரு கட்டங்களையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

ஒன்று உடனடி அபிவிருத்தித் திட்டம் அடுத்து நீண்ட காலத்துக்குச் செய்யும் திட்டங்கள் என வகைப்படுத்தி சுட்டிக்காட்டினார்.

அதாவது மூன்று மாதங்களுக்குள் குறுகிய திட்டத்தை நிறைவு செய்து தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பித்து மக்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பயணம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## மருத்துவத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன.

அத்தோடு அந்த வீட்டில் தங்கியிருந்தால் வெட்டிக் கொலை செய்யப்படுவீர்கள் என ஓர் முஸ்லீம் அமைப்பு சார்பில் தொலைபேசியில் அச்சுறுத்தலும் விடுக்கப் பட்டுள்ளது.

மிரட்டலுக்கு அஞ்சி அந்த வீட்டைத் தாம் கைவிடுவதாகவும் அதனைப் பொறுப்பேற்குமாறும் மருத்துவர்கள் யாழ்ப்பாணப் பிரதேச செயலரை நாடியுள்ளனர். ஆனால், ஏற்கனவே குற்றப் பின்னணியுள்ள வீட்டைத் தாம் பொறுப்பேற்க முடியாது என்று பிரதேச செயலர் கைவிரித்துவிட்டார்.

இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் வீட்டுத் திறப்பை ஒப்படைத்துவிட்டு மருத்துவர்கள் வெளியேறியுள்ளனர்.

## கீரிமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பறித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் பலாலி வீதி உரும்பிராய்ப் பகுதியில் தீ வைத்து கொழுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பொலிசார் மேலதிக விசாலணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நாமலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹேவகேவுக்கு வழங்கியுள்ள பதிலில் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் கோரிக்கைக்கு அமைய 2019 ஆண்டு செப்டெம்பர் 15 வீரகெட்டியவில் உள்ள கால்டன் வீட்டில் நடந்த வைபவத்திற்கு வழங்கிய தற்காலிக மின் விநியோகத்திற்காக 26 லட்சத்து 82 ஆயிரத்து 246.57 ரூபா செலுத்தப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை கூறியுள்ளது.

## ஒற்றையாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமாக 25 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களின் பாவனைக்கு ஒப்படைக்கப்படும். இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நாளொன்றுக்கு சுமார் 2000 லீற்றர் நீரை முழுவதுமாக சுத்திகரிக்கும் திறன் கொண்டவை எனவும் மீள்குடியேற்ற பிரிவு கூறுகிறது.

இந்த நிகழ்வில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்ததாவது:

நாட்டின் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் நன்றி உணர்வு உள்ளவர்கள் என்பதை நான் அறிவேன். 30 வருடங்களாகப் போர் இடம்பெற்ற இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. வடக்கு மக்கள், தெற்கு மக்கள் அனைவரும் ஒன்றுதான்.

எமது பிள்ளைகள் பெறும் கல்வியை வடக்குப் பிள்ளைகளும் பெறவேண்டும். ஆனால் போர்க்காலத்தில் இந்தப் பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்க வேண்டும்.

அமைச்சர் சனத் நிஷாந்த தலையிட்டு வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் நனோ தொழில்நுட்பத்தின் கீழ் 50 குடிநீர் சுத்திகரிப்பு திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். எதிர்காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மேலும் 400 நீர் சுத்திகரிப்பு அலகுகளின் வேலைகளை நிறைவுசெய்யு முடியும் என எதிர்பார்க்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீட்டு உதவி வழங்கி வீடு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். இப்பகுதி மக்களுக்கு வீடுகள், குடிநீர் வழங்குவதற்கு இப்பகுதியின் தலைவராக உள்ள அமைச்சர் காதர் மஸ்தான் பெரும் பணி செய்கிறார். ஜனாதிபதியுடன் கலந்துரையாடி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு அவர் செயற்பட்டு வருகின்றார்.

இன்று அதிகாரப் பகிர்வு தொடர்பில் மீண்டும் விவாதங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒற்றையாட்சி நாட்டின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் என்பது நம் அனைவரின் நம்பிக்கை. நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அனைவரும் இருக்கிறோம். வடகிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்

நிகழ்வில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்யானந்த, மேலதிக செயலாளர் (வீடமைப்பு) டபிள்யூ.எம். ஆனந்த, பணிப்பாளர் வீ. பிரேமசந்திரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஹெரோயினு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகத்தில் ஈடுபடுபவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவரைப் பொலிஸார் கைது செய்தனர். எனினும் நேற்று மாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் போதைப் பொருள் பயன்பாட்டாளர் என்பது கண்டறியப் பட்டது.

இவற்றின் அடிப்படையில் குறித்த பெண் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத் தப்பட வுள்ளார். இதனடிப்படையில் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கைவிடப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயத் துறையை மேம்படுத்துவதை ஆளும் தரப்பால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்.

அதன்படி, நாட்டில் கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையைத் தொடங்க ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர். அந்த வகையில் சுமார் 11,000 ஏக்கர் வயல் நிலங்களில் பயிரிட எதிர்பார்த்துள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருவதோடு, இதற்காக ஆளும் தரப்பு 420 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம்

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அண்மையில் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதன் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரிசி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நெல் கொள்வனவை இடைநிறுத்தியிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபை, ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் மீண்டும் முறையான வழிமுறைகள் ஊடாக நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்த நாடு பூராகவும் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எமது நாட்டில் அரிசி மேலதிக கையிருப்பு இருந்ததாகவும் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்நிலை வீழ்ச்சி அடைந்ததால் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த வருடம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் மீண்டும் பழைய நிலைக்கு மீளலாம்

எமது நாட்டின் பயன்பாட்டுக்கு சுமார் 24 இலட்சம் மெட்ரிக் டொன் அரிசி தேவைப்படுவதாகவும், அந்த வகையில் தற்போது முன்னெடுக்கப்படும் முறையான பொறிமுறைகளின் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையும்.

மேலும், சோளம், உழுந்து, பயறு உள்ளிட்ட மேலதிக பயிர்களின் விளைச்சளை அதிகரிக்க விவசாய அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகிறது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உழுந்து, பயறு ஆகியவற்றைப் பயிரிடும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் உழுந்து பயறு ஆகிய பயிர்களில் பற்றாக்குறை ஏற்படாது.

நாட்டில் தற்போது இளைஞர்கள் படிப்படியாக விவசாயத்திலிருந்து விலகிவருவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்ட அறிக்கை உரையில் குறிப்பிட்டபடி, விவசாயத் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் துறையில் இளைஞர் சமுதாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இளைஞர் தொழில்முனைவோர் விவசாய கிராமங்களை நிறுவும் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்காக பயன்படுத்தப்படாத அரச காணிகளை இளைஞர்களுக்கு விவசாயத்திற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய விவசாயக் கொள்கையை திருத்தங்களுடன் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது. இது எதிர்காலத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தேசிய விவசாயக் கொள்கையின் ஊடாக இந்நாட்டின் விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்கு பாரியளவு பங்களிப்புச் செய்ய முடியும். என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# ஜனாதிபதிப் பதவிக்கு சஜித் பொருத்தமற்றவர்

## விக்னேஸ்வரன் இப்படிக் கருத்து

சஜித் பிரேமதாசா ஜனாதிபதிப் பதவிக்குப் பொருத்தமற்றவர் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். சமகால அரசியல் குறித்த கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டம் பற்றி ஜனாதிபதி நாடாளுமன்றில் உரையாற்றவுள்ளதாக கூறப்படுகின்றது. அது வரவேற்கத்தக்கது. அவர் உரையாற்றினால்தான் அவரது மனதில் என்ன இருக்கிறது என்று தெரிய வரும்.

பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து 13ஐ நடைமுறைப்படுத்துவது குறித்தும் அவர் பேசக்கூடும். அதை பிரச்சினையாக மாற்றி 13 ம் திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக அமுல்படுத்தாமலிருப்பதைத் தமிழ்த் தலைவர்கள் தவிர்க்கப் பார்க்கின்றோம். எந்தவொரு அரசியல்வாதியும் எது சரியென்று செய்வதிலாலை மாறாறக எதைச்யெதால் மக்களின் ஆதரவும் கண்டனமும் கிடைக்குமென்பதைப் பார்த்தே செய்கின்றார்கள். ரணிலும் அதற்கு விதிவிலக்கல்ல.

ரணில் இந்தியா சென்று வந்த பின்னணியில் அவர் அது குறித்தும் பேசக்கூடும். எனவே அவரது மனதில் என்ன இருக்கிறது என்பதை அவர் உரையாற்றுவதன் மூலம்தான் தெரிந்துகொள்ளமுடியும்.

13இல் இருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்பன்பில கொண்டு வந்திருக்கக்கூடிய தனிநபர் வரைவுக்கு ஆதரவு கிடைக்குமா என்று தெரியாது. அவர் நினைத்தமாதிரி 13இலிருந்து குறைக்கவோ கூட்டவோ முடியாது.

எங்கள் மக்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கவேண்டும். அதற்காகத்தான் நாம் 13ஐப் பலப்படுத்தும் திட்டத்தை ஆதரிக்கின்றோம். எல்லாத் தமிழ்க் கட்சிகளும் சமஷ்டியைத்தான் தமது இலக்காகக் குறிப்பிடுகின்றன. அதில் அவற்றுக்கிடையில் வேறுபாடில்லை. ஆனால் அதை எப்படி அடைவது என்று யாரிடமும் எந்தத் திட்டமும் இல்லை. என்னிடமும் இல்லை.

சிறிது சிறிதாக எங்களுடைய அதிகாரங்களைக் கையிலெடுத்துக்கொள்ள வேண்டும். சமஸ்டி, கூட்டு சமஸ்டி என லகட்சிகள் கூறினிலும் இவை அனைத்தும் தூரத்திலுள்ள குறிக்கோள். அதை அடைவதற்கு முன்னர் மக்களுக்கு அதிகாரங்களைப் பெற 13ஐ நடைமுறைப் படுத்த வேண்டும்.

தற்போது எவ்வித அதிகாரங்களும் அற்ற நியைல் அதிகாரங்களைப் பெற்று அதை அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளதால்தான் நாம் 13ஐக் கோருகின்றோம் ஆயினும் அது தீர்வாக அமையாது.

13ஐப் பெற்றால் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக சிங்களத் தரப்பு கூறினாலும் நாம்தான் கவனமாக இருக்க வேண்டும். மக்களுக்கு அதிகாரங்களை பெற்றுக் கொள்ள கூடியவகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பௌத்தம் இலங்கைக்கு வந்து 700 வருடங்களின் பின்னரே சிOகள மொழியும் சிங்கள மக்களும் வந்தார்கள். தற்போது சுத்துமாத்து வேலைகளில் ஈடுபட்டு சிங்களவர்கள் இருந்தார்களென எடுத்துக்காட்ட முனைகின்றார்கள் இது சம்பந்தமாக தொல்பொருட் திணைக்களத்துடன் பேச வேண்டிய நிலையுள்ளது - என்றார்.






# சுகாதார சேவை மீதான நம்பிக்கையை ஜனாதிபதி மீள கட்டியெழுப்பவேண்டும்

## ஜே.சி.அலவத்துவல கோரிக்கை



இலவசசுகாதாரசேவை மீது மக்களுக்கு இல்லாமல் போயுள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதிநடவடிக்கைஎடுக்க வேண்டும்எனநாடாளுமன்ற உறுப்பினர்ஜே.சி.அலவத்து-வல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'இலவச சுகாதார சேவையிலிருந்து மக்களின் உயிரை பாதுகாக்க வேண்டியநிலைமைஇன்று ஏற்பட்டுள்ளது.

தரமற்ற மருந்துகளால் நாட்டின் பல உயிர்கள் இல்லாது போயுள்ளன.

இதனால் மக்கள் மத்தியில் இன்று அச்சம் நிலவிவருவதால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற முடியாத நிலையில், பொது வைத்தியசாலைகள் மீது மக்கள்மத்தியில்நம்பிக்கை அற்றுப் போவது உண்மையில் மோசமானதொரு விடயமாகும்.

சுகாதார அமைச்சரோ, வைத்தியசாலைக்கு வரும் அனைத்து நோயாளிகளும் உயிருடன்திரும்பமாட்டார்கள் என்று சர்வசாதாரணமாகக் கூறியுள்ளார். இவருக்கு மக்கள் உயிர் மீது அக்கறையில்லை. ஜனாதிபதி இந்த விடயம்தொடர்பாகஅவதானம் செலுத்த வேண்டும்.

மக்களின் உயிரைப் பாதுகாப்பதோடு, இலவச சுகாதார சேவை மீது மக்களுக்கு இல்லாமல் போயுள்ளநம்பிக்கையையும் மீண்டும்கட்டியெழுப்பஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். - என அவர் மேலும்குறிப்பிட்டுள்ளார். (05)

# மின் கட்டண நிலுவையால் துண்டிக்கப்பட்ட இணைப்பு

## இருளில் மூழ்கியது மிஹிந்தலை

மிஹிந்தலை ரஜ மஹா விகாரையில் 41 லட்சம் ரூபா மின்சாரக் கட்டணம்செலுத்தப்படாமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் மாவட்ட பிரதேசமின்பொறியியலாளர் சமுத்திரநாத ஜயவர்தன இதனைஉறுதிப்படுத்தினார்.

மிஹிந்தலை ரஜ மஹா விகாரையில் தூபி நிர்மாணம் போன்ற பல அபிவிருத்திநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த வேளையிலேயே இந்த மின்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மிஹிந்தலை ரஜமஹா விகாரைபீடாதிபதிபூஜ்யவளவ ஹங்குனவே தம்மரதன தேரர் குறிப்பிட்டுள்ளார். (05)

# மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் சிரமதான பணி முன்னெடுப்பு







கிழக்கிலங்கையின் வரலாற்றுசிறப்புமிக்க மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 07 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாநகரசபையால், மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் அனைத்து பகுதிகளிலும் மாபெரும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் என்.சிவலிங்கத்தின் ஆலோசனையின் கீழ் மாநகரசபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா தலைமையில் இந்தச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் ஆலய சூழலை பேணும் வகையில் தமது கழிவுகளை அகற்றுமாறு மாநகரசபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜாவால் கோரிக்கை விடுக்கப்பட்டது. (05)



# நீர்க்கட்டணங்கள் அதிகரிப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசனம்

ஆபத்தில்சிக்கியநாட்டைக் கட்டியெழுப்புவதாகக் கூறி நீர்க் கட்டணத்தை அதிகரித்துள்ளதாக அரசாங்கம் மீது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்நாட்டு மக்களை சில தந்திரங்களால் ஏமாற்றி நீர்க்கட்டணத்தை 50 சதவீதத்தால் அதிகரிப்பது மக்களை ஒடுக்கும் தன்னிச்சையான செயலாகும். மக்களின் தோள்களில் சுமையை ஏற்றி எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்?என்றும்தெரிவித்தார்.

அத்துடன் கிட்டிய நாள்களில் எரிவாயு விலை அதிகரிக்கப்படும் போது மக்கள் ஆதரவற்றுப்போவர். அரசாங்கம் மக்கள் மீது எந்த உணர்வும் இல்லாமல் செயற்படுகின்றது. அத்துடன் மக்களது வாழும் உரிமையும் இதனால் மீறப்படுகின்றது.

எனவே அதிகரித்துள்ள நீர்கட்டணத்தைஉடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறைக்கவேண்டும்என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (05)

# வவுனியா தாக்குதல் சம்பவம்; பிரதான சந்தேகநபர் கைது

வவுனியா - தோணிக்கல் பகுதியில் வீடு புகுந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில்,ஏற்கனவேகைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த கொலை மற்றும் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி அகமட் ரசீம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, 5 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரைஅனுராதபுரம்சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு நீதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், எதிர்வரும் 11 ஆம் திகதி ஆள்அடையாளஅணிவகுப்பிற்காக 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம்சாட்சிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்காகபயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கோடரி, கத்தி, இரும்புக்கம்பி என்பனவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவினர், வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் உள்ளிட்ட பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டே 20- 30 வயதுக்குட்பட்ட குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்-துள்ளனர்.

பிரதான சந்தேகநபர் ஊடாக, இவர்களிடம் கொலையை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடையபிரதானசந்தேகநபரான கூமாங்குளத்தை சேர்ந்த ஒருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடம் வவுனியா குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி அதிகாலை வவுனியா - தோணிக்கல் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்தவீட்டிற்குள்பிரவேசித்த சந்தேகநபர்கள், அங்கிருந்தவர்களை கூரிய ஆயுதங்களால் கடுமையாக தாக்கி வீட்டுக்கும் தீ வைத்தனர்.

இதில் குறித்த வீடு தீக்கிரையாக்கப்பட்டதில் 23 வயதுடைய பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், தீக்காயங்களுக்கு உள்ளான அவரது கணவரான 35 வயதுடைய சுகந்தன் என்பவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 26 ஆம் திகதி உயிரிழந்தார்.

மேலும், சம்பவத்தில் 2 வய-துடைய ஆண் குழந்தையொன்றும் 7 வயது மற்றும் 13 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளும் 19 முதல் 41 வயதுக்குட்பட்ட 4 பெண்களும் 42 வயதுடைய ஆண் ஒருவரும் காயமடைந்தநிலையில், அவர்கள்வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சைபெற்றுவருவதாகபொலிஸார் தெரிவித்தனர். (05)

# நியூஸிலாந்து முன்னாள் பிரதமர்களை சந்தித்தனர் பெண் எம்.பிக்கள் குழாம்



நியூஸிலாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கையின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, அந்தநாட்டு முன்னாள் பிரதமர்களான ஜசிந்தா ஆடர்ன் மற்றும் ஹெலன் கிளார்க் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச்சந்திப்பில், அரசியலில்பெண்களின் தலைமைத்துவத்தை வலுப்படுத்துதல், பாலின சமத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் நியூஸிலாந்தின் முதலாவது பெண் பிரதமரான ஹெலன் கிளார்க் இலங்கை நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களிடம் தமது அரசியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# புதிய ஜனாதிபதியாக பஸில் ராஜபக்ஷ நாட்டுக்குக் கிடைப்பது பேரதிஷ்டமாம்



2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக பஸில் ராஜபக்ஷ களமிறக்கப்படலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தீர்மானங்களுக்கு கட்சி என்ற ரீதியில் நாடாளுமன்றத்தின் ஊடாகவும் ஒத்துழைப்பு வழங்குகிறோம். சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை சிறந்த முறையில் வெற்றி கொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராக களமிறக்கவுள்ளதாகவும், முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சமஷ்டியை அடைவதற்கான பாதை எது?

**தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது ஒரு முக்கிய விடயத்தைத் தெரிவித்தார். தமிழ்க் கட்சிகள் அனைத்தினது இறுதி இலக்கும் கூட்டாட்சி (சமஷ்டி)தான் என்கிறபோதும் அதை அடைவதற்கான வழி வகை என்னவென்பதை எந்தவொரு கட்சியும் வெளிப்படுத்தியதில்லை என்று தெரிவித்திருந்தார். தனது கட்சியும் அதை அறிவிக்கவில்லை என்பதையும் ஒத்துக்கொண்டார்.**

**அவர் கூறியது முற்றிலும் சரியானது. சமஷ்டியைப் பேச்சு மூலம் அடைவது என்கிற ஒரேயொரு வழியைத் தவிரத் தமிழ்த் தலைவர்களிடம் விக்னேஸ்வரன் அடங்கலாக எந்தத் திட்டமும் இல்லை. பேச்சு மூலம் சமஷ்டியை அடைவது என்பது சிங்களத் தலைவர்களின் தயவில்தான் நடக்கக்கூடியது. அதாவது அவர்கள் விருப்பப்பட்டால் மட்டுமே நடக்கக்கூடியது.**

**அப்படிச் சிங்களத் தலைவர்கள் விருப்பப்படவேண்டுமனால் அதற்கு சிங்கள மக்கள் முதலில் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலைக்கு வரவேண்டும். தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களிடம் சென்று அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை. தமிழர்களுக்குச் சமஷ்டி ஏன் தேவையாக இருக்கின்றது என்பதை அவர்கள் சிங்கள மக்களிடம் எடுத்துச் சென்றதில்லை. அதற்கு முயற்சிப்பதும் இல்லை. வாக்குகளைப் பெறுவதற்காகத் தமிழ் மக்களிடமே மீண்டும் மீண்டும் சமஷ்டி பற்றிப் பேசிவிட்டு காலத்தைக் கடத்தி விடுவார்களேயன்றி அதை அடைவதற்கான வழிவகை என்னவென்பது அவர்களுக்குத் தெரியாது. அதனைத்தான் விக்னேஸ்வரன் ஒப்புதல் வாக்குமூலமாகத் தெரிவித்திருக்கிறார்.**

**சமஷ்டியை அடையும் வழி தெரியாததால், இருக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதன் மூலம் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வோம், பின்னர் அதிலிருந்து மேலும் முன்னேறிச் செல்லலாம் என்கிறார் விக்னேஸ்வரன். அவர் சொல்லும் இந்த வழிமுறையும் ஒன்றும் புதிதல்ல. கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இதே வழிமுறையைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியும் கூறிக்கொண்டிருக்கிறது. இருப்பதைப் பெற்றுக்கொண்டு இல்லாததைக் கேட்போம் என்பது விக்னேஸ்வரனின் தெரிவு அல்ல, அவருக்கு முன்னரே பலரது தெரிவாக இருந்திருக்கிறது.**

**ஆனால், விக்னேஸ்வரன் மறந்துவிட்டது என்னவென்றால், அப்படிக் கேட்டு ஆளும் தரப்போடு சேர்ந்தியங்கிய எந்தவொரு கட்சிக்காகவும் அல்லது தலைவருக்காகவும் சிங்களத் தலைமைகள் 13ஐயும் நடைமுறைப்படுத்தியதில்லை என்பதுதான். கடந்த காலங்களில் அவர்களையும் சிங்களத் தலைவர்கள் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொண்டார்களே தவிர, அவர்கள் கேட்ட, அவர்கள் ஒத்துப்போன 13ஐ நடைமுறைப்படுத்தும் விடயத்தில் சிங்கள ஆளும் தரப்பினர் ஒருபோதும் விட்டுக்கொடுப்புடன் நடந்துகொண்டதில்லை. இப்போது ரணில் விக்கிரமசிங்கவும் அதனையே செய்கிறார்.**

**இனப்பிரச்சினைக்குத் தீர்வளிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த எந்தவொரு சிங்களத் தலைவரும் அதனைச் செய்ததில்லை. மட்டுமல்ல 13ஐ நடைமுறைப்படுத்தியதுமில்லை. மாறாக மாகாண சபைகள் சட்டத்திலிருந்து அதிகாரங்களை மத்திக்குத் திரும்பவும் பிடுங்கியது மட்டுமே நடந்துள்ளது. இந்த நிலையில் 13ஐப் பெற்று அதிலிருந்து முன்னேறுவது என்ற விக்னேஸ்வரனின் எதிர்பார்ப்பு எவ்வளவு தூரம் யதார்த்தம்? அவரது ஆயுள் காலம் வரைக்கும் காலத்தை இழுத்தடிப்பதற்கு வேண்டுமனால் இந்தக் கோஷம் உதவக்கூடும். ஆனால் நடக்கப் போவது எதுவுமில்லை என்பதே வரலாற்று அனுபவம்.**

**சமஷ்டிதான் இலக்கு என்றால் அதை அடைவதற்கான பாதையைத் தேடிக் கண்டறியவேண்டியதுதான் தமிழ்த் தலைவர்களின் கடமையே தவிர, இருப்பதைப் பெறுவதாக மக்களை ஏமாற்றுவதல்ல. முதலில் இருப்பதைப் பெறுவது, பின்னர் மக்கள் சேவைக்காக அமைச்சுப் பதவிகளைப் பெறுவது, கடைசியில் காலம் முடிந்தது என்று அரசியலில் இருந்து விலகுவது என்று பலவற்றையும் கடந்த காலங்களிலேயே தமிழர்கள் பார்த்தாகிவிட்டது. எனவே இப்போதைய தேவை, சமஷ்டியை அடையும் வழி தெரியவில்லை என்றால் அதனைக் கண்டுபிடிப்பதுதான். அதற்கான தேடலில் இறங்குவதுதான்.**

# எமனாகும் வீதிகள்: தடுக்க வழி என்ன?

**சாரா முட்ஸ்**

விலைமதிப்பற்ற உயிர்களை இழப்பது மட்டுமன்றி, பாதிக்கப்பட்டவர்களுக்கு கணிசமான அதிர்ச்சியையும் ஏற்படுத்திய வாகன விபத்துகளை இலங்கை சமீபத்தில் கண்டுள்ளது. உமா ஓயா திட்டத்தில் பணிபுரியும் பத்து பணியாளர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று, ஜூலை 18 அன்று வெல்லவாய, இத்தா ஆரா என்ற இடத்தில் 10 மீற்றர் பள்ளத்தில் வீழ்ந்து சாரதியின் உயிரைப் பறித்தது. ஆறு பயணிகள் காயமடைந்தனர். மனம்பிடிய, தெமோதர மற்றும் அம்பன்பொல ஆகிய இடங்களில் பேருந்துகள் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் பதிவாகி, இலங்கையின் சாலைப்பாதுகாப்பின் அவலநிலை குறித்து எச்சரிக்கை மணியை எழுப்பியுள்ளன. பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகள், அதில் விபத்துக்களுக்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பது தொடர்பில் கவலைகொள்கின்றனர்.

9 ஜூலை 2023 நிலவரப்படி வாகன விபத்துகளால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை இந்த ஆண்டில் மட்டும் 1,126., பொலிஸ் பதிவுகளின்படி இந்த ஆண்டில், ஜூலை வரை நாடு முழுவதும் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை எண்ணிக்கை 10,012. எவ்வாறாயினும், பதிவுசெய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை உண்மையான சூழ்நிலையைப் பிரதிபலிக்காது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா சுட்டிக்காட்டினார், உண்மையான எண்ணிக்கை இதனைவிட அதிகமாக இருக்கும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வீதி ஒழுங்கை மீறுபவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் உத்தியோகபூர்வமாக பொலிஸில் முறைப்பாடு செய்வதற்குப் பதிலாக காப்புறுதி நிறுவனங்களை நாடித் தமக்குள்ளேயே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் உள்ளன என்பதை அவர் காரணமாகக் காட்டினார்.

கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட வீதி விபத்துக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுவதாகவும் அவர் கூறுகின்றார். சராசரியாக இலங்கையில் ஆண்டொன்றுக்கு 3,000 விபத்துக்கள் பதிவாகின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் புள்ளிவிபரங்களின்படி, மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிக எண்ணிக்கையில் பதிவாகின்றன. நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான இறப்புக்களுக்கும் இந்த விபத்துக்களே பங்களிக்கின்றன. கனரக வாகனம் தொடர்பான விபத்துக்களும் பதிவாகியுள்ளன, இருப்பினும் அவை மோட்டார் சைக்கிள் தொடர்பான விபத்துகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன.

### கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல்

வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவதன் காரணமாகவே நிகழ்கின்றன. அதேசமயம் பாதகமான காலநிலை மற்றும் சாரதியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினாலும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன. ஆனால் அவை மிகக் குறைவான எண்ணிக்கையிலானவையே என்று மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தல்துவா தெரிவித்தார்.

இலங்கைச் சட்டப்படி பொலிஸார் தமது கடமைகளைச் செய்வதற்கு மேலதிகமாக, விபத்துக்களைத் குறைக்கும் முயற்சியாக பொலிஸார் தடுப்பு நடவடிக்கைகள், விழிப்புணர்வு நிகழ்வுகள், போக்குவரத்தை கட்டுப்படுத்துதல், சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். இத்தகைய முயற்சிகள் இருந்தபோதிலும், சில விபத்துக்கள் தவிர்க்க முடியாதவை என்று தல்துவா மீண்டும் வலியுறுத்தினார்;

“சரியான வாகன பராமரிப்பு மற்றும் சாலை ஒழுக்கம், சாலையைக் கடப்பது, பொறுப்பாக வாகனம் ஓட்டுவது, ஓட்டுநர்கள், வாகனங்கள் மற்றும் சாலையில் செல்லும் பாதசாரிகளை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட அடிப்படை விதிகளை ஒவ்வொரு குடிமகனும் அறிந்திருக்கவேண்டும். ஒரு தொடக்க வீரராக, பல நாடுகளில் செய்யப்படுவது போல, பள்ளி மட்டத்திலிருந்து இதுபோன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அறிமுகப்படுத்தப்படவேண்டும், ” என்று அவர் கூறினார்.

மறைகாணி (CCTV) போன்ற தொழில்நுட்பம் உட்பட இலங்கையின் உள்கட்டமைப்பு எவ்வாறு வீதிப் பாதுகாப்பை எளிதாக்குவதிலும் குற்றங்களைத் தடுப்பதிலும் ஒரு செயலூக்கமான பங்கை வகிக்கிறது என்று கேட்டபோது, தல்துவா பின்வருமாறு கூறினார்: ‘‘சிசிடிவி கமராக்களுடன் கூடிய சாலைகளுடன் நல்ல உள்கட்டமைப்பு வசதிகள் எங்களுக்கு நிச்சயமாகத் தேவை. நாடு தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இது ஒரு சவாலாக உள்ளது. தற்போது, சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன, இருப்பினும் சாலை விபத்துகளைக் கண்காணிப்பது உள்ளிட்ட குற்றச் சம்பவங்களைக் கண்காணிப்பதில் அவற்றால் வழங்கப்படும் தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது” என்றார்.

பல நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் வீதி அபிவிருத்தி சிறந்த நிலையில் உள்ளதாக அவர் கூறினார். புறநகர்ப் பகுதிகளிலேயே அதிக விபத்துக்கள் இடம்பெறுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். வீதியைவிட வீதியோர சுற்றுச்சூழலும், சாரதிகளின் கவனக்குறைவுமே அடிக்கடி விபத்துக்கள் நடக்கக் காரணமாக அமைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சாரதிகள் ஒழுக்கத்துடன் செயற்பட்டால் 50 வீதமான வீதி விபத்துக்களைத் தடுக்க முடியும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

‘நமது சுற்றுச்சூழல் மீது அக்கறை எடுத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது, குறிப்பாக தொலைத்தொடர்புக் கோபுரங்கள், மின்சாரக் கோபுரங்கள், வடிகால் அமைப்புகள், குறுகிய பாலங்கள் மற்றும் பாதசாரிகளுக்கு நடைபாதையில் இடமளிக்காத பாழடைந்த சாலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு.சாரதிகள் செயற்படவேண்டும். பெரும்பாலும், சாலையை எதிர்கொள்ளும் வீதியோரக் கடைகள், கடை வளாகத்திற்கும் சாலைக்கும் இடையே நல்ல இடைவெளியைப் பராமரிக்கத் தவறிவிடுகின்றன; இதன் மூலம் நடைபாதையில் இடம் இல்லாததால் வாடிக்கையாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இதுபோன்ற விஷயங்களையும் கருத்தில் கொண்டு கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டால் முன்னேற்றத்திற்கு இடமுண்டு,’’ என்று அவர் மேலும் கூறினார்.

### பேருந்து போக்குவரத்து துறையில் ஊழல்

கொள்கலன் பாரவூர்திகள் (லொறிகள்) போன்ற கனரக வாகனங்கள் வீதியோரங்களில் நிறுத்தப்படுவதனால் விபத்துக்கள் ஏற்படுவதாக குற்றம் சுமத்திய இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

தெற்காசியாவில் அதிகளவு சாலை விபத்துக்கள் கனரக வாகனங்களின் கவனக்குறைவு காரணமாகவே விளைகின்றன என்றும் அவர் கூறினார். ஒரே பாதையில் பயணிக்கும் தனியார் பேருந்துகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் (SLTB) பேருந்துகளுக்கு சரியான நேர அட்டவணை இல்லாதது மற்றும் சாரதிகள் ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டு வாகனங்களைச் செலுத்துவது என்பன இலங்கையில் பொதுப் போக்குவரத்து அனுபவத்தை மிக மோசமாக்கியுள்ளன.

“மன்னம்பிட்டியில் அண்மையில் விபத்துக்குள்ளான பேருந்து அனுமதிப் பத்திரம் இன்றிப் பயணித்தே விபத்துக்குள்ளானது. இந்த விபத்துக்கு கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் வடமத்திய போக்குவரத்து அதிகாரசபை ஆகியனவே பொறுப்பாகும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC) மற்றும் மாகாணங்களின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகள் விபத்துக்களை உன்னிப்பாக அவதானிக்கவேண்டும், மேலும் மக்களுக்கு இடையூறு இல்லாத பேருந்து போக்குவரத்து சேவையை உறுதி செய்வதில் ஆட்சியாளர்களுக்கும் பொறுப்பு உள்ளது. பொது போக்குவரத்து அரச நிதியில்தான் நடக்கிறது. ஆனாலும் அங்கு தலைவிரித்தாடும் ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்காமல் பொதுமக்களை திணறடித்து வருகிறார்கள் ஆட்சியாளர்கள். தமது கடமைகளைச் சரியாகச் செய்யத் தவறும் அரச அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என கெமுனு விஜேவர்த்தன மேலும் குறிப்பிட்டார்.

### சாலைப் பாதுகாப்பு குறித்த முப்பரிமாண முன்னோக்கு

வீதிப் பாதுகாப்பை எவ்வாறு மீறப்படுகின்றது என்பதை தெளிவுபடுத்தும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் தளவாடப் பொறியியல் பீடத்தின் மூத்த விரிவுரையாளர், பொறியியலாளர். கலாநிதி டி.சிவகுமார், சாலைப் பாதுகாப்பை முப்பரிமாணக் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்,

மக்கள், உள்கட்டமைப்பு மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அந்த முப்பரிமாணம் அமைகின்றது என்கிறார் அவர். அவற்றில் ஒன்று அல்லது அவற்றின் கலவையின் தோல்வி விபத்துகளுக்கு வழிவகுக்கும் என்பது அவரது வாதம்.

குறிப்பிட்ட சூழ்நிலையில் விபத்துக்களுக்கு பாதசாரிகள் சாலையை தவறாகப் பயன்படுத்துவது காரணமாக இருப்பதைப் போலவே, பழுதடைந்த வாகனங்களும் காரணமாக இருக்கின்றன என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார். சாலை விபத்துகளுக்கு மூன்றாவது காரணியாக இருப்பது சாலை உள்கட்டமைப்புதான் என்றும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

“முந்தைய வாகனங்களுடன் ஒப்பிடுகையில், நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள், எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்டவற்றின் காரணமாக தற்போது விபத்துக்களில் பங்களிக்கும் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே, தற்போது ஏற்படும் விபத்துகளுக்கு சாலையைப் பயன்படுத்துபவர்களும், உள்கட்டமைப்பு வசதிகளும் முக்கியப் பங்காற்றுகின்றன. சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சில வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் மழலையர் பள்ளி மட்டத்திலிருந்து மேல்நோக்கி நன்கு திட்டமிடப்பட்டுள்ளன. நமது கல்வி முறையில், பாடத்திட்டத்தில் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நாங்கள் காண்கிறோம் என்றாலும் அவை போதாது, இது தொடர்பாகச் சில ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை‘ என்று கலாநிதி சிவகுமார் குறிப்பிட்டார். இருப்பினும்,

அத்தகைய அறிவு மழலையர் பள்ளிக்கு பிந்தைய மட்டத்தில் தொடராதபோது பிரச்சினை எழுகிறது என்று அவர் கூறினார்; இதன் மூலம் தனிநபர்கள் பெரியவர்களாக சமூகத்தில் நுழைந்தவுடன் கல்வி முறையின் முழுப் பயன்களையும் பெற முடியாமல் போகிறார்கள்.

“மக்கள் தங்கள் சாரதிப் பத்திரத்தைப் பெற முயலும்போது மட்டுமே, சாலைப் பாதுகாப்பு குறித்த அறிவைப் பெறுகிறார்கள், அதாவது. சாரதிப் பத்திரம் பெறுவதற்காக சில மணி நேரம் அல்லது சில நாள்களை மட்டுமே ஒருவர் சாலைப் பாதுகாப்புத் தொடர்பில் செலவிடுகிறார். இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்பாடு மட்டுமே, தனிநபர்கள் தங்கள் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்று வாகனத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். குறைந்த அளவு பயிற்சி பெற்ற நபர்களிடம் வாகனம் ஒப்படைக்கப்படுவதால் இது மிகவும் ஆபத்தான காட்சியாகும். டிரைவிங் பள்ளிகள் முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டு, கல்வி முறையின் தேவைகளுக்கு ஏற்றவாறு மறுகட்டமைக்கப்படவேண்டும்” என்று கலாநிதி சிவகுமார் வலியுறுத்தினார்.

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஓட்டுநர் உரிமம் பெறுவதில் சட்டமும் நடைமுறையும் எவ்வாறு கடுமையாக உள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டினார்; முக்கியமாக மனித உயிருக்கு அங்கெல்லாம் மதிப்பு மற்றும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால். ஓட்டுநர் உரிமம் வழங்குவதில் கடுமையான சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் குறிப்பிடுகின்றார். இலங்கையில் அது தலைகீழானது, எவ்வளவு விரைவாக ஓட்டுநர் உரிமம் கிடைக்கப் பெறும் என்பதே இங்குள்ளவர்களின் கேள்வியாக இருக்கின்றது. இந்த நோக்கத்திற்காக அது ஒரு நாள், ஒரு வாரம் அல்லது ஒரு மாத கல்வியுடன் ஓட்டுநர் உரிமம் கிடைத்துவிடுகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

‘உள்கட்டமைப்பைப் பொறுத்தவரை, வடிவமைப்பிற்குத் தொடர்புடைய அனைத்து அளவீடுகளும் திட்டத்தின் தொடக்கத்தில் நன்கு கவனிக்கப்படுகின்றன. இருப்பினும், பணிகள் தொடங்கும்போது, அரசியல் அழுத்தம், கட்டுமான சிக்கல்கள் போன்றவற்றின் காரணமாகத் தரை மட்டத்தில் சில தடைகள் ஏற்படுகின்றன, இதனால் கட்டுமானத்தின்போது பல சமரசங்கள் செய்யப்படுகின்றன. இத்தகைய சமரசங்கள் மக்களைக் கொல்கின்றன” என்று அவர் விளக்கினார்.

ஓர் உட்கட்டுமான வடிவமைப்பு அங்கீகரிக்கப்பட்டதும், அதை மாற்றக் கூடாது என்று கூறிய கலாநிதி சிவக்குமார், கட்டுமானத்தின்போதும், கட்டுமானப் பணியின்போதும், வடிவமைப்பு நிலையிலும், சுயேச்சையான மூன்றாம் தரப்பினரால் சாலைப் பாதுகாப்பு தணிக்கை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். வீதி பாதுகாப்பு தணிக்கைகளை மேற்கொள்வதற்கான சரியான நிறுவனம் இலங்கையிடம் இல்லை என்று கூறும் அவர், இதனால் வீதிகள் ஆபத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சரியான வழிகாட்டி பலகைகளை அமைக்காதது, தவறான இடத்தில் பாதசாரிகள் கடவைகளை அமைப்பது, சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு தொழில் பயிற்சி திட்டம் இல்லாதது மற்றும் சாலை அமைக்கும் இடங்களில் அலட்சியம் காட்டுவது ஆகியவை சாலை பாதுகாப்பு தரத்தை மேலும் சமரசம் செய்து, சாலை விபத்துகளை தவிர்க்க முடியாததாக ஆக்கியுள்ளது. பொதுமக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் இதனால் ஆபத்து விளைகின்றது. ஆட்சியாளர்கள் இது தொடர்பில் அதிக அக்கறை எடுத்துச் செயற்படுவது இன்றியமையாதது.

(நன்றி: டெய்லிமிரர்)

காலைக்கதிர் Kalaikkathir



# கட்டணமானி பொருத்தப்படாத ஓட்டோக்கள் யாழில் அகற்றம்

யாழ்.நகர்ப் பகுதியில், ஓட்டோத் தரிப்பிடத்தில் இருந்து கட்டணமானி பொருத்தாத ஓட்டோக்களை அகற்றும் நடவடிக்கையில் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ் நகர் பகுதியில் வியாழக்கிழமை காலை முதல் பொலிஸார் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் பெரும்பாலான ஓட்டோக்களில் கட்டணமானி பொருத்தப்படாமையால் மக்களிடம் அதிகளவில் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாகப் போக்குவரத்துப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனையடுத்து யாழ் மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாக ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டா என யாழ்.மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் கடந்த இரண்டு மாத காலத்துக்கு முன்னரே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த கால அவகாசம் முடிவடைந்துள்ளநிலையிலேயே பொலிஸார் கட்டணமானி பொருத்தாத ஓட்டோக்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (05)




# சீமெந்துத் தொழிற்சாலையில் இரும்புகள் திருடப்படுகின்றன

## காங்கேசன்துறையில் சம்பவம்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பிரதேசவாசிகள் இரும்புதிருட்டில் ஈடுபட்டு வருவதாகவும், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 120 மில்லியன்ரூபாவுக்கும்அதிகமான பெறுமதியுடைய இரும்புகள் திருடப்பட்டுள்ளன எனவும் சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத்தர்மபிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொழிற்சாலைக்கு உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால், தொழிற்சாலைக்கு அருகில் வசிக்கும் பிரதேச வாசிகள் தொழிற்சாலை வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து திருட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 33 வருட காலமாக தொழிற்சாலை இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் பாதுகாப்பாக இருந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறிய பின்னரே இவ்வாறான திருட்டுகள் அதிகரித்து வருகின்றன. மேலும்திருட்டுசம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது, இரும்பு திருட்டை தடுக்க பாதுகாப்பு குழுவொன்றை தாம் நியமித்துள்ள போதிலும் , திருட்டில் ஈடுபடும் பிரதேச வாசிகளுக்கும், பாதுகாப்பு குழுவிற்கும் இடையில் முரண்பாடுகள்ஏற்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த காலப் பகுதியில் பெரு மளவான இரும்புகள் திருடப்பட்டதுடன், இரும்பு திருட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சில இராணுவத்தினரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு உதவுவதற்குப் பலர் முன்வருகை





புலம்பெயர் தொழிலதிபரும், சமூக செயற்பாட்டாளருமான பாஸ்கரன் கந்தையா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, கனடாவில் இருக்கும்ஒருவரும், யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒருவரும் இணைந்து நேற்று யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அலுமினிய பிட்டிங் துறைக்கு ஒரு தொகுதி பொருள்களை வழங்கியுள்ளனர். கனடாவில் இருக்கும் தாட்சாயினி என்பவர் தான் சார்ந்தவர்களிடம் சிறுகச் சிறுகச் சேர்த்த 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும், கனடாவில் இருந்து தற்போது யாழ்ப்பாணத்திற்கு வந்து தொழில்முயற்சியாளராக இருக்கும் ஜோன்சன் என்பவர் ஒரு லட்சம் ரூபாவையும் வழங்கி மொத்தமாக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு அலுமினிய பிட்டிங் செய்வதற்கான கருவிகள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

'யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை புலம்பெயர் மக்கள் தமது உதவிகளால் தாங்கி எமது அடுத்த தலைமுறையினரின் அறிவு விருத்திக்கு உதவ முன்வரவேண்டும்' என்று பாஸ்கரன் கந்தையா விடுத்திருந்த வேண்டுகோளைத் தொடர்ந்து, யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு உதவுவதற்கு பலர் முன்வந்துகொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)





# முட்கொம்பன் காட்டு பகுதியில் தீப் பரவல்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில் 65 ஏக்கர் வீட்டு திட்டத்தின் பின்பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் தீ பரவியுள்ளது. குறித்த பகுதியில் தீயானது தொடர்ச்சியாக மூன்று தினங்களாக எரிந்து வந்த நிலையில் நேற்றையதினம் பாரிய அளவில் தீ பரவ ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் தயாபரன்சென்றுகண்காணித்ததுடன், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவிற்கும் தகவல் வழங்கியுள்ளார்.

தொடர்ந்து பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவின் உதவியுடன் தீப் பரவலைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும், காட்டுப்பகுதிக்குள்செல்வதற்கு பாதை இல்லாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்துஅப்பகுதி மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தத் தீ பரவலுக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# 'யாழ் நிலா ஒடிஸி' ரயில் சேவை ஆரம்பம்

சுற்றுலாப்பயணிகளை பிரதானஇலக்காகக்கொண்ட 'யாழ்நிலாஒடிஸி'என்றரயில் நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் கல்கிசைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

வார இறுதி நாள்களில் இயக்கப்படும் 'யாழ் நிலா ஒடிஸி' நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு 10 மணிக்கு கல்கிசை நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10 மணிக்கு காங்கேசன்துறைநிலையத்திலிருந்து கொழும்பு திரும்பும் ரயில் மறுநாள் காலை 6 மணியளவில் கல்கிசை நிலையத்தை சென்றடையும்.

பயணிகளிடம் முதல் வகுப்பு இருக்கைக்கு நான்காயிரம் ரூபாவாகவும், இரண்டாம் வகுப்பு இருக்கைக்கு மூவாயிரம் ரூபாவாகவும் இரண்டாம்வகுப்பு இருக்கைக்கு இரண்டாயிரம் ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலானரயில்பயணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர் திருவிழா ஓகஸ்ட் 21ஆம் திகதி ஆரம்பமாகிசெப்ரெம்பர்16ஆம்திகதி வரை நடைபெற உள்ளது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும்இடையிலான ரயில்கள் டிசெம்பர் மாதம் வரைமட்டுமேஇயங்கும்என அமைச்சு தெரிவித்துள்ளது.

மாஹோ சந்திக்கும் அநுராதபுரத்துக்கும் இடையிலான ரயில் மார்க்கம் புனரமைக்கப்படுவதால், டிசெம்பர் மாதம் முதல் வடக்கு மார்க்கத்துக்கான ரயில் சேவைகள் மீண்டும் பாதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 13ஆம் திருத்தம் குறித்து தமிழ் அரசியல்வாதிகள் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையாம்

## சனத் நிஷாந்த கூறுகிறார்

'வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு மத்தியஅரசால்வழங்கப்பட்ட நிதியைக் கூட உரிய முறையில்செலவுசெய்யாமல் திருப்பி அனுப்பிவிட்டு தற்போது 13 ஆம் திருத்தச் சட்டம் பற்றி தமிழ்அரசியல்வாதிகள் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. – என நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்துள்ளார்.



அண்மையில் வவுனியா தரணிக்குளத்தில் இடம்பெற்ற நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நிதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வட மேல் மாகாணசபையில் நான் உறுப்பினராகவும்அமைச்சராகவும் இருந்துள்ளேன். இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது தமிழ் அரசியல்வாதிகள்காணிபொலிஸ்அதிகாரம் என மக்களுக்கு பிழையான மனோரீதியானஉற்சாகத்தை வழங்குகின்றனர்.

மாகாணசபை என்பது விசாலமானஅதிகாரங்களைக் கொண்டகட்டமைப்பு. வடக்கு கிழக்கு மாகாணசபையில் 13 திருத்தச்சட்டம் மற்றும் பொலிஸ் காணி அதிகரம் எனக்கூறிக்கொண்டிருப்பதை விடுத்து 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக மாகாணசபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை எப்படி வெல்லலாம் என சிந்திக்க வேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டம் ஊடாகவே மத்திய அரசும் மாகாண அரசும் சம்பந்தப்படுகின்றது. பெரு வீதிகள், ரயில்வே, மின்சாரம், இலங்கை போக்குவரத்து சபை, நீதிக்கட்டமைப்பு, தேசிய பாடசாலைகள், தேசிய வைத்தியசாலைகள் தவிர அனைத்தும் மாகாணசபையின் ஊடாக செயற்படுத்தவும் நிறுவனங்களாகும். அவற்றை வெற்றிகொண்டு வேலைத்திட்டத்தை மேற்கொள்ள முடியும். 13 ஆவது திருத்த சட்டத்தால் கிடைக்காத சின்னச்சின்ன பிரச்சினைகளை விடுத்து கிடைத்ததைவெற்றிகொண்டு செயற்படுத்த பாடுபட வேண்டும். 13 பற்றி பேசிக்கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியை கூட உரிய முறையில் செலவு செய்யாமல்திருப்பிஅனுப்பும் நிலை காணப்பட்டது.

எனவே, கிடைத்த அதிகாரத்தை பயன்படுத்தி அதனூடாக செய்ய முடிந்தவற்றை செய்ய வேண்டும். அதனைவிடுத்து கிடைக்காததற்காக காத்திருப்பது தேவையற்றது எனத் தெரிவித்தார். இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தான் உட்பட பலரும்கலந்துகொண்டனர். (05)

# சுன்னாகம் - மயிலிணி வித்தியில் சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய விவசாயக்கழகமும், ஆரம்ப்பிரிவு மற்றும் விசேட கல்வி அலகு மாணவர்களும் இணைந்து நேற்று(வெள்ளிக்கிழமை) சிறுவர் சந்தையொன்றை முன்னெடுத்து இருந்தனர்.

மயிலணி முருகமூர்த்தி கோயில் முன்றிலில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இந்தச் சந்தையைக் காண வலிகாமம் வலயக் கல்வி அலுவலர்கள், உட்பட பலரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது அதிகளவானவர்கள் சந்தையில் பொருள்களை வாங்கிச் சென்றமையை அவதானிக்க முடிந்தது. குறித்த பாடசாலை தேசிய ரீதியில் இடம்பெற்ற 'மதர் சிறிலங்கா', முதலாம் இடத்தைப் பெற்று. வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்த பாடசாலையுமாகும்.

இதுமட்டுமன்றி தொழில் முனைவுடன் கூடிய பாடசாலைத் தோட்டத்தை சிறப்பாக அமைத்து பலரின் பாராட்டையும் இந்தப் பாடசாலை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியமை சிவாஜிலிங்கத்துக்கு அழைப்பாணை விடுப்பு!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சட்ட முறையற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டமைக்காகவே இந்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 07.08.2023 அன்று வழக்கிற்க்காக சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பானை கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் ஒப்பத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இந்த அழைப்பாணையை உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ்ப்பாணத்து இளைஞனின் உயிரைப் பறித்த ஹெரோயின்

ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவில் நுகர்ந்த இளைஞரொருவர் யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் உயிரிழந்துள்ளார். குருநாகல் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

மின்சார உபகரண விற்பனைக்காக குறித்த இளைஞன் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள நிலையில் கல்வியங்காட்டில் அவர் வியாழக்கிழமை உபகரணங்களை விற்பனை செய்துகொண்டிருந்தவேளை மயங்கி விழுந்துள்ளார்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துயாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டவேளை உயிரிழந்துள்ளார் எனவும் ஹெரோயினை பாவித்தமையால் குறித்த மரணம் நிகழ்ந்துள்ளதாகவும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

OKAYA
ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable
## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

# இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# வாகன மோசடி: மூவர் கைது!

## யாழ்., கிளிநொச்சி சேர்ந்தவர்கள்

மோட்டார் சைக்கிளில் இயந்திர, அடிச்சட்ட இலக்கங்களை ஓட்டோவுக்குப் பயன்படுத்தி மோசடி செய்ய முயன்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் நீதிமன்றால் பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் ஓட்டோ ஒன்றைத் தனது பெயருக்கு மாற்றம் செய்வதற்காக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்குச் சென்றுள்ளார்.

அங்கு அதிகாரிகள் ஓட்டோவின் இயந்திர மற்றும் அடிச்சட்ட இலக்கத்தை பரிசோதித்த போது, சந்தேகம் ஏற்பட்டு, அது தொடர்பில் ஆராய்ந்த போது, அவை மோட்டார் சைக்கிள் ஒன்றினுடையது எனவும், வாகன புத்தகமும் போலியானது என கண்டறிந்துள்ளனர்.

அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் வாகனத்தை பதிவு செய்தவற்கு கொண்டு சென்ற நபரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது, தனக்கு கிளிநொச்சி பகுதியை சேர்ந்த நபரே ஓட்டோவை விற்பனை செய்ததாக கூறியதை அடுத்து பொலிஸார் கிளிநொச்சி வாசியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் போது அவர், தான் ஓர் இடைத்தரகர் எனவும் வாகனங்களை வாங்கி விற்பனை செய்பவர் எனவும், ஓட்டோவை மருதங்கேணி பகுதியை சேர்ந்த நபரே விற்பனை செய்தார் எனக் கூறியுள்ளார்.

அதனை அடுத்து மருதங்கேணி நபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் மூவரையும் முற்படுத்திய வேளை, ஓட்டோவைப் பதிவு செய்ய சென்ற நல்லூர் பகுதியை சேர்ந்தவரை பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்று, ஏனைய இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (05)

# காலிமுகத்திடல் போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்து ஆராய்வு!



போராட்டத்தின் எதிர்காலம் என்ற தொனிப் பொருளில் மாநாடு ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் செயற்பாட்டாளர்களுள் ஒருவரான தானிஷ் அலி தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் செயற்பாட்டாளர்களுள் ஒருவராக இருந்த தானிஷ் அலி உள்ளிட்ட போராட்டத்தில் ஈடுபட்ட மேலும் சிலர் ஒன்றிணைந்து குறித்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அம்பாந்தோட்டை சிங்கப்பூர் மண்டபத்தில் போராட்டத்தின் எதிர்காலம் என்ற தொனிப் பொருளில் மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் ராஜித சேனாரத்னவின் மகன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன தலைமையிலான ஜனநாயக தேசிய இயக்கத்தால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் 25 மாவட்டங்களையும் குறித்த மாநாடுகளில் உள்ளடக்க எதிர்பார்ப்பதாகவும் ஏற்பாட்டாளரான தானிஷ் அலி மேலும் தெரிவித்துள்ளார். (05)



# கட்டுநாயக்க - அபுதாபி இடையில் விமான சேவை

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கும் அபுதாபி விமான நிலையத்துக்கும் இடையில் குறைந்த கட்டண விமான சேவையை ஆரம்பிப்பதற்கு இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை சான்றிதழை வழங்கியுள்ளது.

எயார் ஏசியா - அபுதாபி ஏர்லைன் நிறுவனத்துக்கு வியாழக்கிழமை விமான நடவடிக்கை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

இதன்படி, இந்த விமான நிறுவனம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து தனது விமானச் சேவையை ஆரம்பிக்கவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# இந்திய உயர்ஸ்தானிகருடன் சபாநாயகர் விசேட சந்திப்பு!



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பரஸ்பர நீண்டகாலப் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது என்றும் உயர்ஸ்தானிகர் இங்கு சுட்டிக்காட்டினார்.

எரிசக்தித் துறை, கல்வித்துறை மற்றும் டிஜிற்றல் துறை உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாகவும் இந்த விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகர் சபாநாயகருக்கு விளக்கமளித்தார்.

இந்தியா இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்த சபாநாயகர், இந்தியாவின் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பது தொடர்பாக மகிழ்ச்சி வெளியிட்டார்.

இலங்கை, இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தைக் கூட்டுமாறு கேட்டுக்கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர், அதன் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தல்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பரிமாற்றத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதால் நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது

## நிரோஷன் பெரேரா சுட்டிக்காட்டு



'சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதால் மட்டும், நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'இந்தநாட்டை மீட்டெடுக்க வேண்டுமெனில், அனைத்து நாடுகளினதும் உதவி தேவைப்படுகிறது. சர்வதேச நாடுகளின் முதலீடுகள் தேவைப்படுகிறது. நாம் அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும்.

நாம் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதானிகளுடன் பேசும் போதெல்லாம், நம் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முன்வருமாறுதான் அழைப்பு விடுக்கிறோம். ஏனெனில், இந்த அரசாங்கம் சரியான பதில் ஒன்றைக் கூறாமலேயே தேர்தல்களை ஒத்திவைத்துள்ளது.

நிதியில்லாத காரணத்தால் அன்றி, வாக்குகள் கிடைக்காத காரணத்தால்தான் அரசாங்கம் தேர்தலை பிற்போட்டுள்ளது என்பது சிறு பிள்ளைக்குக்கூடத் தெரியும். அடுத்தாண்டுகூட தேர்தலை நடத்தும் எண்ணம் இவர்களுக்குக் கிடையாது. அரசாங்கத்துக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுக்காண வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதால் மட்டும், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)



# 13 திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் இருக்கும் நல்லிணக்கமும் இல்லாது போய்விடும்

## எச்சரிக்கின்றார் விமல்

13 ஆவது திருத்தச்சட்டத்தை பொலிஸ் அதிகாரத்துடன் முழுமையாக அமுல் படுத்தினால், வட மாகாணத்தில் முற்றாக மத சுதந்திரம் இல்லாது போய்விடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் -

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதால் மட்டும், நாட்டிலுள்ள இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது.

மாகாணசபைகளுக்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்படாத நிலையிலேயே, யாழ், திஸ்ஸ ரஜமகா விகாரையில் சமயக்கிரியைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

இந்தநிலையில், பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் வடக்கில் ஒருபோதும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது போய்விடும்.

கொழும்பில் இந்துமத கிரியைகளை மேற்கொள்ள எந்தத் தடையும் கிடையாது. இங்கு தடையின்றி வேலை சுமந்துக் கொண்டு வீதி ஊர்வலம் செல்லலாம்.

யாரும் இதற்கு எதிர்ப்பை வெளியிட மாட்டார்கள்.

எனினும், யாழில் தங்களுக்கு விரும்பிய மதங்களை வழிபட முடியாத நிலைமையே உள்ளது.

இப்படியான அடிப்படைவாத சிந்தனை கொண்ட அரசியல்வாதிகள் உள்ள மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக வழங்கினால், இப்போது இருக்கும் நல்லிணக்கமும் இல்லாது போய்விடும். - என்றார். (05)

# மனைவியைப் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து தாக்கிய கணவன் யாழில் கைது

யாழில் போதைப் பொருளுடன் கைதான தனது மனைவியைப் பொலிஸ் நிலையத்தினுள் புகுந்து தாக்கிய கணவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆறுகால்மட பகுதியில் 80 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கைதான மனைவியைப் பார்க்க வேண்டும் என பொலிஸ் நிலையம் வந்த கணவன் மனைவி மீது பொலிஸ் நிலையத்தினுள் வைத்து சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார்.

உடனே சுதாகரித்துக் கொண்ட பொலிஸார், கணவனின் தாக்குதலில் இருந்து மனைவியை காப்பாற்றியதுடன், மனைவியை பொலிஸ் நிலையத்தினுள் வைத்து தாக்கிய குற்றச்சாட்டில் கணவனையும் கைது செய்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட பெண், கணவனுக்கு தெரியாமல் போதை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும், பெண்ணுக்கு போதைப் பொருளை விநியோகித்தவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பால் இறக்குமதி வேண்டாம்

முட்டையை இறக்குமதி செய்தது போன்று பாலையும் இறக்குமதி செய்யாதிருக்க ஏற்பாடுசெய்யுங்கள் என கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கால்நடை பண்ணையாளர்கள் அண்மையில் ஏற்பாடுசெய்திருந்த ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கரைச்சி வடக்கு கால்நடை கூட்டுறவாளர் சங்கத்தின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி நிலை காரணமாக கால்நடை பண்ணையாளர்கள் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்பட்டதை போன்று பாலையும் இறக்குமதி செய்திருக்க கால்நடை பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உரிய தீர்வை அரசாங்கம் பெற்றுத்தர வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)



# பிரதமர் தினேஸ் தலைமையில் அம்பாறை மீளாய்வுக் கூட்டம்

'புதிய கிராமம் - புதிய நாடு' தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) அம்பாறை மாவட்ட செயலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி கூட்டம் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில்; இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காக கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி மையங்களை மேம்படுத்துவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் அம்பாறை பிரதான பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

அத்தோடு நெல் கொள்முதல் வேலைத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் விவசாயிகளுக்குரிய உரமானியத்துக்கான வவுச்சர்கள் வழங்கும் நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

உரமானியத்துக்கான வவுச்சர்கள் உரிய காலத்தில் கிடைப்பதன் மூலமே விவசாய நெற்செய்கையை சிறப்பாக மேற்கொள்வதுடன் அதிக விளைச்சலையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்த மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பிரதமர் ஏற்றுக்கொண்டதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் இங்கு பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, விமல வீர திஸாநாயக்க, டபிள்யூ. வீரசிங்க, எச்.எம்.எம். ஹரீஸ், பைசல் காசீம், திலக் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர். (05)

# இறந்த நிலையில் யானையின் சடலம்



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு விநாயகர்புரம் மனமஞ்சான் பகுதியில் இறந்த நிலையில் யானை ஒன்று அப்பகுதி மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் குறித்த யானை பெண்யானை எனவும், 6 அடி உயரமும் 8 அடி அகலமும் கொண்ட 15-20 வரையிலான வயதைக் கொண்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த யானையின் பின் வலக்கால் கண்ணிவெடி தாக்குதலில் சிதைவடைந்து காணப்படுவதாகவும் யானையின் உடற்கூற்று பரிசோதனைகள் இன்று இடம்பெறும் எனவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2023இல் வெளியிடப்பெற்றது.